பக்கங்கள் 20 + 05

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 ஆனி 05 செவ்வாய்க்கிழமை 18.06.2024 அதிர்வு 323

இலங்கைக்குள் அத்துமீறிய

## இந்திய மீனவர்கள் நால்வர் சிக்கினர்!

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் நான்கு இந்திய மீனவர்கள் இலங்கைக் 04



# யாழ். இந்தியத் துணைத் தூதரகம் கடற்றொழிலாளர்களால் முற்றுகை

**போராட்டக்காரர்களை உள்நுழையாதவாறு தடுத்து நிறுத்திய பொலிஸார்; அமைதியாகச் சென்று துணைத் தூதுவரிடம் மகஜர் கையளித்த மீனவர்கள்**

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்து மீறும் இந்திய இழுவைப் படகுகளைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தி யாழ். இந்தியத் துணைத் தூதரகம் முன்பாக யாழ். மாவட்ட கடற்றொழி லாளர்கள் இன்று போராட்டத்தை முன்னெடுத்தனர்.

"இந்திய அரசே எமது கடல் வளத் தைச் சூறையாடாதே! எம்மையும் வாழ விடுங்கள்!!" எனக் கோரி யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இந்தப் போராட்டம் நடைபெற்றது. 02






## கிளிநொச்சியில் அடிகாயங்களுடன் இளைஞரின் சடலம் மீட்பு!



கிளிநொச்சி, தர்மபுரம் பகுதி யில் உள்ள நெத்தலியாற்றில் இருந்து இளைஞர் ஒருவரின் சடலம் மீட்கப் பட்டுள்ளது.

கிளிநொச்சி, புளியம்பொக் கனை பகுதியைச் சேர்ந்த 27 வயதுடைய சம்சுதீன் என்ற இளை ஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

சடலம் உடற்கூற்றுப் பரிசோத னைக்காக கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையில் ஒப்ப டைக்கப்பட்டுள்ளது.

சடலத்தில் அடிகாயங்கள் காணப் படுகின்றன என்று தெரி வித்த பொலி ஸார், இது தொடர்பில் மேலதிக விசா ரணை களை முன்னெடுத்துள்ளனர்.




# யாழ். இந்தியத் துணைத் தூதரகம் கடற்றொழிலாளர்களால் முற்றுகை

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டக்காரர்கள், யாழ்ப்பாணம் சென் பொஸ்கோ பாடசாலைக்கு அருகாமையிலுள்ள மருதடிச் சந்தியில் இருந்து இந்தியத் துணைத் தூதரகம் வரை பேரணியாகச் சென்றனர்.

இதன்போது மீனவர்கள், துணைத் தூதரகம் முன்பாகக் கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

“இலங்கைக் கடற்படையே நிறுத்து நிறுத்து அத்துமீறலைத் தடுத்து நிறுத்து, அமைச்சர் கண்ணைத் திறந்து பார், இந்திய அரசே எம்மையும் வாழ விடு, ஸ்ரீலங்கா பொலிஸே எங்களை தடுக்காதே” உள்ளிட்ட பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறு அவர்கள் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

எனினும், போராட்டக்காரர்களைத் துணைத் தூதரகத்துக்குள் நுழைய விடாமல் பொலிஸார் தடுத்து நிறுத்தினார்.

இதையடுத்து தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை மீனவர் பிரதிநிதிகள் அமைதியாகச் சென்று யாழ். இந்தியத் துணைத் தூதுவரிடம் கையளித்ததுடன் அவரிடம் தங்கள் நிலைமைகளை எடுத்துரைத்தனர்.













# மதுபானசாலைக்கு எதிர்ப்பு மக்கள் திரண்டு போராட்டம்

(எஸ்.கீதபொன்கலன், அஸ்ஹர் இப்றாஹிம்)

மூதூர் – இருதயபுரம் பகுதியில் திறக்கப்பட்டுள்ள மது பானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பொதுமக்களால் இன்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள், சமூக ஆர்வலர்கள், சமயத் தலைவர்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது திருகோணமலை – மட்டக்களப்பு பிரதான வீதியில் ஒன்று கூடிய பொதுமக்கள் மதுபானசாலைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில், “மது வைக் கொடுத்து குடியைக் கெடுக்காதே”, “ஏழைகளின் வயிற்றில் அடிக்காதே”, “விவசாயிகளின் உழைப்பை மதுவில் கரைக்காதே” போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியும், கோஷ ங்களை எழுப்பியும் எதிர்ப்பில் ஈடுபட்டனர்.

பின்னர் அங்கிருந்து மூதூர் பிரதேச செயலகம் வரை சென்று, செயலகத் துக்கு முன்னால் எதிர்ப்பில் ஈடுபட்டதுடன் மதகுருமார்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் ஊடக வியலாளர் அடங்கிய ஐந்து பேரைக் கொண்ட குழுவினர்



பிரதேச செயலாளரிடம் மகஜரைக் கையளித்து மிக நீண்ட நேரமாக பேச்சில் ஈடுபட்டனர்.

இதையடுத்து குறித்த மதுபான விற் பனை நிலையம் தற்காலிகமாக மது வரித் திணைக்களத்தால் நிறுத்தி வைக் கப்பட்டுள்ளதுடன் திருகோண மலை மாவட்ட அரச அதிபர் குறித்த இடத்துக்கு விஜயம் மேற்கொண்டு மேலதிக நடவடிக் கைகளை மேற் கொண்டார்.

இருதயபுரம் பகுதியில் மக்களுடைய எதிர்ப்புகளையும் மீறி கடந்த வியாழக் கிழமை மதுபான விற்பனை நிலையம் திறக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.







# உயர்நீதிமன்றத் தீர்ப்பு குறித்து ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழு வேண்டும்

**சபையில் ஜனாதிபதி தெரிவிப்பு**

"பாலின சமத்துவச் சட்டமூலம் தொடர்பாக உயர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு, பெண்களின் உரிமைகளுக்கும் பௌத்த மதத்தின் பாதுகாப்புக்கும் சவாலாகவும் பிரச்சினைக்குரியதாகவும் அமையலாம் என்பதால், அது குறித்து, ஆராய நாடாளுமன்றத் தெரிவுக்குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு கூறினார்.



# தெரிவுக்குழு தேவையில்லை

## ஜனாதிபதியின் கருத்துக்கு சஜித் பதிலடி

"எமது நாட்டின் முத்தரப்பு ஜனநாயகக் கட்டமைப்பில், நிறைவேற்று, சட்டவாக்கம் மற்றும் நீதித்துறை ஆகிய மூன்று நிறுவனங்களிலும் தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறையும், அதேபோல இவற்றுக்கிடையே அதிகாரப் பகிர்வும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில் குறைபாடுகள் இருப்பின், தடைகள் மற்றும் சமன்பாடுகள் முறைக்கு பாதிப்பு ஏற்படாத வகையிலயே இது திருத்தப்பட வேண்டும்."

– இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இன்று நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"ஒரு நிறுவனம் மற்றொன்றை அடக்கி அல்லது மௌனமாக்கும் பிம்பத்தை உருவாக்காதீர்கள். வேறு ஒரு முறையைப் பின்பற்றி, ஏதேனும் பிழைகள் இருப்பின் அவற்றைச் சரி செய்யும் அரசமைப்பு முறைக்குச் செல்ல வேண்டும்.



உயர்நீதிமன்றம் வழங்கிய முடிவுகளை ஆராய தெரிவுக் குழுக்களை நியமிப்பதில் எமக்கு உடன்பாடில்லை. குறைபாடுகள் இருப்பின் வேறு ஏற்றுக்கொள்ளத்தக்க சட்டரீதியான ஏற்பாடுகள் ஊடாக இந்தக் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய வேண்டும்." – என்றார்.







# வீதி விபத்தில் மூவர் காயம்!

**(எஸ்.அஷ்ரப்கான்)**

வீதி விபத்தில் மூவர் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை, அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஒலுவில், தென்கிழக்கு பல்கலைக்கழகம் முன்பாக பிரதான வீதியில் நேற்று இரவு 7.45 மணியளவில் கல்முனை நோக்கிப் பயணித்த மோட்டார் சைக்கிள், சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளானது.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்த மூவர் வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மேற்படி விபத்து தொடர்பில் அக்கரைப்பற்றுப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டனர்.

## இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரால் நேற்று இரவு கைது செய்யப்பட்டனர்.

யாழ். காரைநகர் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த ஒரு படகையும், அதிலிருந்த நான்கு இந்திய மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்களைக் கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# நாங்கள் பல்சமயத்து மக்களாக வாழ்ந்தாலும் மற்றவர் மதச் சுதந்திரத்தை மதிக்க வேண்டும்

## மன்னார் அரச அதிபர் கனகேஸ்வரன்

(வாஸ் கூஞ்ஞ)

மன்னாரில் பல்லின மற்றும் பல சமய மக்கள் வாழுகின்ற போதும் எம் மத்தியில் ஒற்றுமை தொடர்ந்து நிலை நாட்டப்பட வேண்டும். மற்றவர்களது மதச் சுதந்திரத்தை மதிக்க வேண்டும்.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய அபிவிருத்தி நிதியமும் வேம் என அழைக்கப்படும் கிராமிய முகாமைத்துவ நிறுவனங்களின் சம்மேளனமும் இணைந்து சனிக்கிழமை (15) மன்னாரில் மனித வாழ்வில் சமய சுதந்திரம் என்ற தொணிப் பொருளில் நிகழ்வு ஒன்றை நடத்தின.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் இங்க தொடர்ந்து உரையாற்றுகையில்,

மனித வாழ்வில் சமய சுதந்திரம் என்ற தொணிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த நிகழ்வு மிகவும் வரவேற்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

மன்னார் மாவட்டத்தில் பல சமயங்களைப் பின்பற்றுபவர்கள் வாழ்கின்றார்கள். ஆகவே இவர்கள் மத்தியில்



ஒற்றுமையை வளர்த்துக் கொள்வது மிக அவசியமானது.

1998 ஆம் ஆண்டு எமது நாட்டில் கொண்டு வரப்பட்ட அரசமைப்புக்கு அமைய சகல மதங்களுக்கும் சம அந்தஸ்து வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இலங்கையில் வாழும் ஒவ்வொருவரும் தாங்கள் விரும்பும் சமயத்தைப் பின்பற்ற முடியும். இது ஒவ்வொருவருக்கும் உள்ள தனிப்பட்ட உரிமை.

ஆகவே மன்னார் மாவட்டம் பல்லின, பல்சமய மக்கள் வாழும் ஒரு மாவட்டமாக இருப்பதால் யாவரும் தங்கள் மதச் சுதந்திரத்தை பேண நாம் இடம் கொடுக்க வேண்டும்.

இவ்வாறு ஒவ்வொருவரும் கடைப்பிடித்து வரும் மத நம்பிக்கைகளை நாம் மதிக்க வேண்டும். இது அமையாவிடில் நாட்டில் அமைதியின்மையும் பொருளாதாரமும் பாதிப்புகளுக்கு உள்ளாக நேரிடும்.

ஆகவேதான் நாம் சமய சுதந்திரத்தை பேணிப் பாதுகாக்க வேண்டும். இங்குள்ள ஒவ்வொரு மதத்தினரும் தங்கள் மதங்களைப் பற்றியே தெரிவிக்கின்றனர்.

ஆனால் இவர்கள் மற்றைய மதங்களைப் பற்றி விமர்சிப்பது கிடையாது. கடந்த காலத்திலும் சமயத் தலைவர்களும் இவ்வாறே செயல்பட்டு வந்துள்ளனர்.

இந்து மதத்தில் இராமகிருஷணன் என்ற சமய தலைவர் ஒருவர் இருந்தார். அவர் மதச் சுதந்திரத்தைப்பற்றி கூறுகையில்,

ஒரு குளத்தில் நீர் எடுக்கும் ஆங்கிலேயர் வோட்டர் என்றும் , சிங்கள மொழி பேசும் ஒருவர் வத்துறு என்றும் , தமிழர் ஒருவர் தண்ணீர் என்றும் கூறியே மூவரும் ஒரு பொருளைத் தான் எடுக்கின்றனர்.

இவ்வாறுதான் யாவரும் வேறுபட்ட முறையில் இறைவனை நாடினாலும் எல்லோரும் ஒரே கடவுளைத்தான் நாடுகின்றனர் என்று வலியுறுத்தி இருந்தார்.

ஆகவே, மன்னார் மாவட்ட மக்களும் பல சமயத்தவர்களாக இங்கு இருந்தாலும் தொடர்ந்து தங்கள் ஒற்றுமையை நிலை நாட்ட வேண்டும்.– என்றார்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## வரலாற்றுச் சந்தர்ப்பம்

வரவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் வழமைக்கு முற்றிலும் மாறாக தென்னிலங்கை அரசியல் தலைவர்கள் மட்டுமல்லாமல், தென்னிலங்கை ஊடகங்கள் பலவும் கூட சிறுபான்மையினர் குறித்து - வடக்கு, கிழக்குத் தமிழர்கள், மலையகத் தமிழர்கள், முஸ்லிம்கள் குறித்து - அதாவது தமிழ்ப் பேசும் மக்கள் குறித்து - அதிகம் பேசவும் ஊடாடவும் அவர்கள் மத்தியில் பிரசாரம் செய்யவும் முனைவது அவதானிக்க தக்கதாக உள்ளது.

அதற்குக் காரணம் உண்டு. சோழியன் குடுமி சும்மா ஆடாதல்லவா...?

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலைப் பொறுத்தவரை அளிக்கப்பட்ட மொத்த செல்லுபடி வாக்குகளில் 50 வீதத்துக்கு மேலதிகமாக ஒரு வாக்குக் கூடப் பெற்றவர் வெற்றி பெற்றவராக அறிவிக்கப்பட்டு விடுவார்.

இதுதான் 1982 முதல் இதுவரை இடம்பெற்ற எட்டு ஜனாதிபதி தேர்தல்களிலும் நடந்தது.

ஒவ்வொரு முறையும் இரண்டு பிரதான கட்சியின் வேட்பாளர்கள் இடையே தான் நேரடிப் போட்டி இருந்தது. அதனால் ஒரு வேட்பாளர் ஐம்பது வீத வாக்குகளை தாண்டுவது சாத்தியமாக இருந்தது.

எனினும் ரணசிங்க பிரேமதாஸவும், மஹிந்த ராஜபக்ஷவும் முறையே 50.4 வீதம் மற்றும் 50.3 வீத வாக்குகளைப் பெற்று - மட்டுமட்டாகத்தான் - வென்றார்கள் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

முதல் சுற்றில் எந்த வேட்பாளருக்கும் தனித்து ஐம்பது வீத வாக்குகள் கிட்டாமல் விட்டால், முதல் நிலை வேட்பாளர்கள் இருவரைத் தவிர, ஏனையவருக்கு அளிக்கப்பட்ட வாக்குகளின் இரண்டாம், மூன்றாம் விருப்பத் தெரிவுகள் கணக்கெடுக்கப்படுகின்ற இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கை இடம்பெறும்.

அவற்றையும் சேர்த்து முதல் இருவரினதும் வாக்குகள் கணக்கிடப்பட்டு, அதில் வெற்றி பெற்றவர் ஜனாதிபதியாக அறிவிக்கப்படுவார்.

இலங்கை ஜனாதிபதி தேர்தலில் முதல் தடவையாக, இந்த ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலில்தான் போட்டி இருமுனை என்பதைத் தாண்டி, மும்முனைச் சவாலாக மாறி இருக்கின்றது.

இந்த முத்தரப்பு வேட்பாளர்களில் எவரும் இன்னும் கூட 25 வீத வாக்காளர்களின் ஆதரவைத் தமக்குச் சார்பாகத் திரட்டவில்லை எனக் கருத்துக் கணிப்புகள் தெளிவுபடுத்துகின்றன.

மூன்று பிரதான வேட்பாளர்கள் இடையேயும் கடும் போட்டி நிலவுகின்றது.

இனி, இறுதி நேரத்தில் ஏதேனும் அதிசயங்கள் நிகழ்ந்தாலே தவிர, இந்த நிலைமைதான் கடைசி வரை நீடிக்கும் என்றும் கணக்கிடப்படுகின்றது.

அதனால் இம்முறை எந்த வேட்பாளரும் தனித்து முதல் சுற்றில் 50 வீத வாக்குகளைத் திரட்ட மாட்டார்கள் - திரட்ட முடியாது - என்று பார்வையாளர்கள் உறுதியாக கருதுகின்றனர்.

ஆகையினால், இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கை இந்த முறை தவிர்க்கவே முடியாத கட்டாயம் என்று கருதப்படுகிறது.

இந்தப் பின்புலத்தில் முதல் சுற்றில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் வேட்பாளர்களைத் தவிர்த்து, மூன்றாவது வேட்பாளருக்கும் அதன் பின்னர் வரும் ஏனைய வழமையான வேட்பாளர்களுக்கும் வாக்களித்தவர்களின் வாக்குச் சீட்டுகளில் அடுத்த நிலை விருப்பத் தெரிவு கவனத்தில் எடுக்கப்படும் சூழல் உருவாகும்.

அதனால்தான் சிறுபான்மையினரின் முதல் தெரிவு தாங்களாக இல்லாவிட்டாலும், இரண்டாவது விருப்பமாக வாவது தங்களை அவர்கள் தெரிவு செய்ய வைப்பது தங்களுக்குப் பயனளிக்கும் என்று பிரதான வேட்பாளர்கள் மூவரும் கருதுகின்றனர்.

அதனால்தான் அவர்கள் இம்முறை பேரினவாதத்தை ஒதுக்கி வைத்து விட்டு, சிறுபான்மையினரை அரவணைக்கத் துடிக்கின்றனர்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் பேரினவாதம் பேசி, அதன் மூலம் வாக்குகளைச் சுருட்டி, வெல்ல முடியும் என்று உறுதி இருந்தமையால், அதனைக் கைகொண்ட கோட்டாபய ராஜபக்ஷ அதன் காரணமாக சிறுபான்மையினரை முற்றாக ஒதுக்கினார்.

ஆனால், நிலைமை இந்தத் தடவை அதுவல்ல. தமிழ்ப் பேசும் சிறுபான்மையினரின் வாக்குகள்தான் நாட்டின் அடுத்த நிறைவேற்று அதிகார ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிக்கும் அபூர்வ வாய்ப்பு இம்முறை கிட்டி இருக்கின்றது.

அதை சரிவரத் தந்திரமாக - சாணக்கியமாக - பயன்படுத்துவதும் அல்லது வெற்றுக் வேஷங்களுக்கு எடுபட்டு இந்த வரலாற்று வாய்ப்பை உதைத்துத் தள்ளுவதும் அந்த சிறுபான்மையினரின் கைகளில்தான் உள்ளது.

### 2025-2026 இல் நடைபெறவுள்ள

# ஊனமுற்றோர் சமூகத்தின் உரிமைகள் தொடர்பான சர்வதேச மாநாட்டுக்குத் தலைமை தாங்கும் இலங்கை!





எதிர்வரும் 2025 - 2026 ஆம் ஆண்டுகளில் நடத்தத் திட்டமிடப் பட்டுள்ள 18 மற்றும் 19 ஆவது சர்வ தேச மாற்றுத் திறனாளி சமூகத்தின் உரிமைகள் மாநாட்டுக்கு இலங்கை தலைமை தாங்குகிறது.

இது மொத்த மக்கள் தொகையில் 8.7 வீதமான மாற்றுத்திறனாளிகளுக்கு மட்டுமல்ல, ஒரு நாகரீக நாடு என்ற வகையிலும் நாம்பெற்ற மாபெரும் வெற்றி என மாற்றுத் திறனாளிகள் சமூகத்தின் ஒருங்கிணைவுக்கான நாடாளுமன்ற மன்றத்தின் தலைவர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள் ளார்.

ஐக்கிய நாடுகள் சபையால் ஏற் பாடு செய்யப்பட்ட ஊனமுற்ற சமூ கத்தின் உரிமைகள் தொடர்பான 17 ஆவது சர்வதேச மாநாடு அமெரிக் காவின் நியூயோர்க் நகரில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலை மையகத்தில் கடந்த 11, 12, 13ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இலங்கையை பிரதிநிதித்துவப் படுத்தி, அதில் கலந்துகொண்டு பின் னர் ஊடகவியலாளர்களிடம் பேசுகை யில் டலஸ் அழகப்பெரும இதனைக் குறிப்பிட்டுள்ளார்.





# மாவடிப்பள்ளி கலாச்சார மண்டப நிர்மாண வேலைகள் ஆரம்பம்

**(எம்.எம்.றம்ஸீன்)**

அம்பாறை மாவட்ட மாவடிப்பள்ளி கலாச்சார மண்டப நிர்மாண வேலை கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மாவடிப்பள்ளி பெரிய பள்ளிவாசலின் வேண்டுகோளுக்கு இணங்க, திகா மடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும் கல்முனை மற்றும் காரைதீவு உள்ளிட்ட பிரதேசங்களின் அபிவிருத்திக் குழுக்களின் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப்பின் பன்முகப்படுத் தப்பட்ட நிதியில் இருந்து மாவடிப்பள்ளி கலாச்சார மண்டப நிர்மாணத்துக்கு ஐந்து மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் கட்டட வேலைக் கான ஆரம்ப நிகழ்வு இடம்பெற்றது.

இதன் போது நாடாளுமன்ற உறுப் பினர் சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப்



பிரதம அதிதியாக கலந்து கொண்டு கலாச்சார மண்டப நிர்மாண வேலைத் திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்

பள்ளிவாசல் தலைவர் முனாப், செய லாளர் பௌமி, மௌலவி பாரிஸ், நாடா ளுமன்ற உறுப்பினரின் இணைப்புச் செயலாளர் அஷாம் அப்துல் அஸீஸ், காரைதீவு பிரதேச சபையின் முன்னாள் உப தவிசாளர் ஏ.எம்.ஜாஹிர், நாடா ளுமன்ற உறுப்பினரின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் வை.எல். எம். நியாஸ், மாவடிப்பள்ளி விளையாட்டு கழகங்களின் உறுப்பினர்கள், ஊர் முக்கியஸ்தர்கள் பொது மக்கள், நலன் விரும்பிகள் எனப் பலரும் இதன் போது கலந்து கொண்டனர்.



# வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பொலிஸாரிடையே தடகளப் போட்டி

(எஸ்.நிதர்ஸன்)

வடக்கு மாகாணம் தழுவிய ரீதியில் பொலிஸாரிடையே வருடாந்த தடகள விளையாட்டுப் போட்டி நேற்று திங்கட்கிழமை (17) யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி பி.ராஜா, வடக்கு மாகாண பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஏ.சி.தனபால, யாழ்ப்பாண மாவட்ட பதில் அரச அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரி சி.பிரணவன், பொலிஸ் உயரதிகாரிகள் என பலரும் கலந்துகொண்டனர்.

ஐந்து மாவட்டங்களில் இருந்தும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தடகள விளையாட்டு போட்டிகளில் பங்கேற்று பரிசில்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# பாதுகாப்பற்றவாறு ரயில் பயணம் எச்சரிக்கை வழங்குமாறு கோரிக்கை

( மஸ்கெலியா)

மலையக ரயில் பாதையில் ரயிலில் பயணிக்கும் வெளிநாட்டு, உள்நாட்டு சுற்றுலா பயணிகள் சிலர் ரயில் பலகைகளில் தொங்கியவாறும், ரயிலில் பயணிக்கும்போது பாதுகாப்பற்ற ஆபத்தான நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்று ஏனைய பயணிகள் விசனம் தெரிவிக்கின்றனர்.

ஓஹியாவுக்கும் பட்டிப்பொலவுக்கும் இடையில் ரயில் மிதிபலகையில் தொங்கிக் கொண்டிருந்த உக்ரேனியப் பெண் கடந்த 15 ஆம் திகதி தவறித் தரையில் விழுந்து படுகாயமடைந்துள்ளார்.

இதே போல பலர் சுரங்க பகுதிகளிலும் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளனர்.

நாவலப்பிட்டியில் இருந்து பதுளை ரயில் நிலையம் வரையான மலையக ரயிலில் பயணம் செய்யும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகள் பலர் ரயில் மிதிபலகைகளில் தொங்கிச் செல்கின்றனர். சில வெளிநாட்டவர்கள் ரயில் பலகைகளில் தொங்கியவாறு செல்பி எடுக்கின்றனர் என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்களில் ஈடுபடும் சுற்றுலாப் பயணிகள் சில சமயங்களில் ரயிலில் இருந்து தவறி விழுந்து விபத்துகள் ஏற்படுவதாக ரயில் பயணிகள் கூறுகின்றனர்.

மலையக ரயில் பாதையில் பாதுகாப்பற்ற முறையில் பயணிக்கும் உள்நாட்டு, வெளிநாட்டவர்களுக்கு எச்சரிக்கும் நடவடிக்கையை ரயில்வே அதிகாரிகள் உடனடியாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் பயணிகள் மேலும் தெரிவிக்கின்றனர்.



# தென்மராட்சி அபிவிருத்திப் பிரச்சினைகளை ஜனாதிபதிக்குத் தெரிவித்தும் பயனில்லை!

## பொது அமைப்புகள் விசனம் தெரிவிப்பு

**(த.சுபேசன்)**

தென்மராட்சிப் பிரதேசத்தின் அபிவிருத்தி மற்றும் முன்னேற்றம் கருதி ஒரு சில பிரச்சினைகளை ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு சென்ற போதிலும் இதுவரை தீர்வு கிடைக்கவில்லை என்று தென்மராட்சியின் பொது அமைப்புக்கள் மற்றும் சாவகச்சேரி நகரசபையின் முன்னாள் உறுப்பினர்கள் வருத்தம் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் சாவகச்சேரி நகர சபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற பொதுப் பணச் செலவளிப்புத் தொடர்பான கலந்துரையாடலில் கலந்து கொண்ட தென்மராட்சிப் பிரதேச பொது அமைப்புக்களுடைய அங்கத்தவர்கள் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

தென்மராட்சி அபிவிருத்திக் கழகமானது, ரோட்டரிக் கழகத்தின் பங்களிப்போடு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் அவசர சிகிட்சைப் பிரிவை இயக்க வைப்பதற்குத் தேவையான பல மில்லியன் ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கியிருந்தனர்.

எனினும் இன்றுவரை அந்த அவசர சிகிச்சைப் பிரிவை இயக்க வைக்க முடியவில்லை. குறித்த கட்டடம் இதுவரை மூன்று தடவைகள் திறக்கப்பட்டுள்ளன. ஆளணிப் பற்றாக்குறையைக் காரணம் காட்டி தீவிர சிகிச்சைப் பிரிவை இயக்காமல் உள்ளனர். இதனால் தென்மராட்சி மற்றும் பளைப் பகுதிகளில் இடம்பெறும் விபத்துச் சம்பவங்களுக்கான சிகிச்சையைப் பெற யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையையே நாட வேண்டியுள்ளது.

அத்துடன் சாவகச்சேரி நகர சபையில் மக்கள் பிரதிநிதிகள் அங்கம் வகித்த காலத்தில் நுணாவில் பகுதியில் சிறுவர் பூங்காவிற்கென காணி கொள்வனவு செய்யப்பட்டு -சில பெறுமதியான விளையாட்டு உபகரணங்களும் அங்கே பொருத்தப்பட்டன. ஆனால் அவை பொருத்தப்பட்டு 3வருடங்களைக் கடக்கின்ற போதிலும் அந்த சிறுவர் பூங்கா இன்று வரை மக்கள் பயன்பாட்டுக்காக விடப்படவில்லை.

தற்போது மேற்படி சிறுவர் பூங்கா காணியின் ஒரு பகுதியை சமுர்த்தி வங்கி கட்டடம் அமைப்பதற்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதில் பல அரசியல் தலையீடுகளும் காணப்படுகின்றன.

தென்மராட்சியில் மாத்திரம் 18 ஆயிரம் சிறுவர்கள் உள்ள போதிலும் தென்மராட்சியில் சிறுவர் பூங்கா இல்லாமையால் பொழுதுபோக்கு அம்சங்களுக்காக யாழ்ப்பாணம் நோக்கிச் செல்ல வேண்டியுள்ளது.

இது தொடர்பிலும் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இருந்த போதிலும் தீர்வு என்பது எட்டாக் கனியாகவே உள்ளது என மேலும் அவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.





# கல்லடி திருச்செந்தூர் ஆலய கும்பாபிஷேகத்துக்கு இந்தியா, இலங்கையிலிருந்து புனித தீர்த்தங்கள்!

## ஆதீனங்கள் ஒன்றிணைந்து 20 ஆம் திகதி குடமுழுக்கு

( கனகராசா சரவணன் )

மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலய கும்பாபிஷேகத்துக்காக இந்தியா, இலங்கை ஆகிய நாடுகளில் உள்ள 21 கங்கைகளின் புனித தீர்த்தங்கள் எடுக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு கல்லடி மாரியமன் ஆலயத்தில் இருந்து திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதின குருமா சந்நிதான கயிலைப்புனிதர் முதுமுனைவர் சீர்வாளர் சீர் சாந்தலிங்க மருதாச்சல அடிகள் தலைமையில் 20 சுவாமிகள் நேற்று திங்கட்கிழமை (17) மாலையில் திருச்செந்தூர் ஆலையத்துக்குத் தீர்த்தங்களை ஊர்வலமாக எடுத்துச் சென்றனர்.

நாளை மறுதினம் 20 ஆம் திகதி மட்டக்களப்பு கல்லடி திருச்செந்தூர் முருகன் ஆலய கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது. இந்தியா மற்றும் இலங்கையிலுள்ள பிரவலமான பல ஆதீனங்களின் சுவாமிகள் ஒன்றிணைந்து இந்தியாவின் கங்கை முதலான 12 புனித தீர்தங்களும் இலங்கையில் உள்ள திருக்கேதீஸ்வரம் பாலாவி முதலான 9 புனித தீர்தங்களும் கொண்டு திருநெறிய தெய்வத்தமிழ் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவை நடத்தவுள்ளனர்.

இந்த புனித தீர்தங்களுடன் மதுரை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் ஆலய தெய்வ நெறிகள் தலைவர் சிவானந்த சுந்தரானந்த சரஸ்வதி சுவாமி, திருவண்ணாமலை சடைச்சசாமி ஆச்சிரம 5 ஆவது மடாதிபதி தவத்திரு திருப்பாத சுவாமிகள், திருநெல்வேலி ஸ்ரீமத் பரசமய கோளறி நாத38ஆவதுஆதீனசந்நிதானஸ்ரீராஜ ராஜேஸ்வரி பீட புத்தாத்மானந்த சரஸ்வதி சுவாமிகள், இந்தியா அகில பாரதீய சன்னியாசிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் சுவாமி வேதசந்த ஆனந்த ஆச்சாரியார், திருவண்ணாமலை சடைச்சசாமிகள் ஆச்சிரம தவத்திரு நிர்மாலானந்தர் சுவாமிகள் உட்பட 20 பேர் கொண்ட சுவாமிகள் இந்தியாவில் இருந்து எடுத்து வந்த புனித தீர்தங்கள் மற்றும் இலங்கையில் கங்கை முதலான புனித தீர்தங்கள் மட்டக்களப்பு கல்லடி ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலையத்துக்கு கொண்டுவரப்பட்டு அங்கு விசேட பூஜை வழிபாடு இடம்பெற்றன.

இதனை தொடர்ந்து இந்தியா, இலங்கை ஆதின மடாதிபதிகள் சந்நிதானங்கள் தலைமையில் கலசங்களிலுள்ள புனித தீர்தங்கள் மற்றும் 108 முளைப்பாரிகள் பெண்களால் சிறப்பு பிராத்தனையுடன் அங்கிருந்து கல்லடி பிரதான வீதியை வந்தடைந்து, பின்னர் சரவணா வீதியை சென்று நாவலடி வீதி ஊடாக திருச்செந்தூர் முருகன் ஆலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டன.

அதனை தொடர்ந்து ஆதின சுவாமிகளைச் செம்கம்பள வரவேற்பளித்து கொண்டுவரப்பட்ட தீர்தங்கள் யாக சாலையில் வைக்கப்பட்டன.

இந்தியாவில் இருந்து வருகை தந்த ஆதின மடாதிபதி சுவாமிகளிடம் பக்தர்கள் ஆசிர்வாதம் பெற்றனர்.

இதேவேளை நாளை புதன்கிழமை எண்ணைய்காப்புசாத்தலைத்தொடர்ந்து நாளை மறுதினம் (20) வியாழக்கிழமை காலை 10.30 மணிக்கு இந்தியா, இலங்கை பல ஆதின மடாதிபதிகள் ஒன்றிணைந்து திருநெறிய தெய்வத்தமிழ் திருக்குட நன்னீராட்டு பெருவிழாவை நடத்தவுள்ளனர்.











# தாழுங்குடா மணல் வீதி கிறவல் வீதியாகத் திருத்தம்



**(பழுவூரான்)**

மண்முனைப்பற்றுப் பிரதேச செயலகப் பிரிவுக்கு உட்பட்ட தாழங்குடாப் பகுதியில் உள்ள வேடர் குடியிருப்புக் கிராமத்தில் மணல் வீதியாகக் காணப்பட்ட வீதிகளை கிரவல் வீதிகளாகப் புனரமைத்து மக்கள் பாவனைக்குக் கையளிக்கும் நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (17) இடம்பெற்றது.

'மணல் வீதிகள் அற்ற கிராமங்கள்' எனும் தொனிப் பொருளுக்கமைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி ஒதுக்கீட்டில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தின் அமுலாக்கத்திலும் மண்முனைப்பற்றுப் பிரதேச செயலகத்தின் கண்காணிப்பிலும் 2.2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட்ட இவ்வீதியானது மக்கள் பாவனைக்காகக் கையளிக்கப்பட்டது.

இதன்போது வீதியின் பெயர்ப் பலகை திறந்து வைக்கப்பட்டு மக்கள் பாவனைக்காகக் கையளிக்கும் இந்த நிகழ்வில், கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், மண்முனைப் பற்றுப் பிரதேச செயலர் தட்சணகௌரி தினேஷ், மண்முனைப்பற்றுப் பிரதேச சபைச் செயலாளர் எஸ்.சர்வேஸ்வரன், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் திணைக்கள அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள்!



**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு பாண்ட் வாத்தியக் கருவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன.

பாடசாலையில் நீண்ட நாள் தேவை கருதி மேற்கத்தேய பாண்ட் வாத்திய கருவிகளை, பாடசாலையின் பழைய மாணவர் குழந்தை வைத்தியர் டாக்டர் சரவணபவானந்தா, கல்லூரி அதிபர் செல்லையா இளங்கோவிடம் அண்மையில் கையளித்தார்.



# சுழிபுரம் மேற்கில் கௌரவிப்பு நிகழ்வு

(த.சுபேசன்)

சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக்கல்வி நிலையமும் சுழிபுரம் மேற்கு கலைமகள் இலவசக் கல்விப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமும் இணைந்து, மேற்படி கல்வி நிலையத்தில் கல்வி கற்று உயர்தரத்தில் சித்தி பெற்ற மாணவர்களையும் பல்கலைக்கழகப் பட்டத்தை நிறைவு செய்த மாணவர்களையும் கௌரவித்துள்ளன.

ஓய்வு நிலை அதிபர் ச.இராமலிங்கம் தலைமையில் இடம்பெற்ற கௌரவிப்பு நிகழ்வில், கல்வி நிலைய மாணவர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன. தொடர்ந்து க.பொ.த உயர்தர பெறுபேறுகளின் அடிப்படையில் 3ஏ சித்திகளை பெற்ற ஞானேஸ்வரன் கிந்துஷா கௌரவிக்கப்பட்டார்.





கல்வி நிலையத்தின் பழைய மாணவர்களான அண்மையில் யாழ். பல்கலைக்கழகத்தில் கணக்கியலில் சிறப்பு வணிக நிர்வாகமாணி பட்டம் பெற்ற சித்திரசேனன் றாகவன் மற்றும் கலாசார சுற்றுலா துறையில் சிறப்பு பட்டம் பெற்ற இராசரத்தினம் தர்ஷன் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சங்கானை பிரதேச செயலாளர் கவிதா உதயகுமாரும் கௌரவ விருந்தினர்களாகத் தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பரா.நந்தகுமார், சங்கானை அ.மி.த.க. பாடசாலையின் முன்னாள் அதிபர் ம.முகுந்தன், கல்வி நிலைய புலம்பெயர் ஒருங்கிணைப்பாளர் த. தேவகுமார், புலம்பெயர் தேச நலன்விரும்பி பு.கமலதாஸ் , சுழிபுரம் மேற்கு சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள், மாணவர்கள், ஆசிரியர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# அட்டாளைச்சேனையில் பாதயாத்திரீகருக்கு முஸ்லிம்கள் பழரசம் வழங்கிக் கௌரவிப்பு





( வி.ரி. சகாதேவராஜா)

யாழ்ப்பாணம், தொண்டமானாறு, செல்வச்சந்நிதி – கதிர்காமம் பாதயாத்திரை குழுவினர் 37ஆவது நாளில் இன்று (18) செவ்வாய்க்கிழமை அட்டாளைச்சேனையில் பயணித்தபோது இஸ்லாமிய பெருமக்கள் அடியார்களுக்கு பழரசம் வழங்கி கௌரவித்தனர்.

இன்று காலை மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்தில் தரிசனம் செய்தனர். அங்கு ஆலய பரிபாலன சபைத் தலைவர் கி.ஜெயசிறில் குடும்பத்தினர் அடியார்களுக்கு காலை ஆகாரம் வழங்கினர்.

மேலும் பல அடியார்களுக்கு பாலமுனை, அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று போன்ற இடங்களுக்குச் சென்று காலை ஆகாரம் வழங்கினர்.

பின்னர் அடியார்கள் அக்கரைப்பற்று சென்று தங்கியிருந்தனர். நாளை தம்பட்டை தம்பிலுவில் திருக்கோவில் சென்று விநாயகபுரத்தில் தங்குவர்.

எதிர்வரும் 29 ஆம் திகதி உகந்தை மலையை அடையவுள்ளனர்.

# வலய மட்டக் கைப்பந்துப் போட்டியில் மகாஜனாவின் இரு அணிகள் சம்பியன்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

யாழ். வலிகாமம் வலய மட்ட கைப்பந்துப் போட்டியில் யாழ்ப்பாணம், தெல்லிப்பளை மகாஜனா கல்லூரியின் இரு அணிகளும் சம்பியன்களாகின.

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான கைப்பந்துப் போட்டியில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு பெண்கள் அணியும் 20 வயதுப் பிரிவு பெண்கள் அணியும் சாம்பியன்களாகியுள்ளன.

இந்தப் போட்டிகள் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணம், பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் நடைபெற்றது.





# பசறை புனித பர்னபா ஆலயத்தின் 75ஆவது ஆண்டு திருவிருந்து!



**நடராஜா மலர்வேந்தன், பசறை.**

சுமார் 74 வருடங்களை கடந்து, பசறை பிரதேசத்தில் இறை பணியின் அடையாளமாக தனது வரலாற்றை பதிவு செய்துள்ள பசறை புனித பர்னபா ஆலயத்தின் 75 ஆண்டு, கொழும்பு மறை மாவட்டத்தின் 16 ஆவது பேராயர் அதி வணக்கத்துக்கு உரிய துஸாந்த லக்ஸ்மன் ரொட்ரிகொவால் கடந்த 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருவிருந்து வழிபாட்டுடன் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதன்போது குருவானர் ஜோன்சன் ஜோசப், இறையியற்கல்வியியற்கல்லூரி பீடாதிபதி குருவானவர் சாந்தகுமார் சுரேஷ்குமார், புனித பர்னபா ஆலய குருவானவர் தயாளன் பிலிப்பையா, மஹாதோவ கிறிஸ்துநாதர் ஆலய அருட்சகோதரர் ஆனந்தராஜா, பசறை சேகர சபை மக்கள் அனைவரும் ஆராதனையில் பங்குபற்றினர்.

வரலாற்றுத் தரவுகளின் அடிப்படையில் 1911 ஆம் ஆண்டளவில் ஒருங்கமைக்கப்பட்ட வணக்கத் தளமாக பரிமாணம் பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ள இந்த ஆலயமானது, இலங்கை திருச்சபைத் திருப்பணி 1817 ஆம் ஆண்டில் கண்டியில் ஆரம்பிக்கப்பட்டு அதன் பின்னர் படிப்படியாக வளர்ச்சியடைந்து, பெருந்தோட்டப் பகுதிகளில் தமிழ் ஆலய திருப்பணி எனும் பெயரில் மாற்றம் பெற்று, பின்னர் தமிழ் கூலி திருப்பணி எனும் பெயரில் மாற்றம் பெற்று தனது பணியை மேற்கொண்டது.

பசறை நகரையும் டெமேரியா தோட்டத்தின் எல்லையிலும் அமைந்திருந்த வழிபாட்டுத் தளமானது அப்போதைய பசறை சிற்றாலயமாகக் கருதப்பட்டது. இந்தச் சிற்றாலயம் கட்டி முடிக்கப்பட்ட போது பெரும்பாலும் நமதாண்டவர் இயேசு கிறிஸ்து பிறந்த மாட்டுத் தொழுவத்தையொத்த எளிமையான உருவ அமைப்பைக் கொண்டிருந்தது.

இதேவேளை, நான்கு மாதங்களுக்கு ஒருமுறை வழிபாடும் அத்தோடு உயிர்த்த ஞாயிறு மற்றும் நத்தார் தின ஆராதனைகளும் நடத்தப்பட்டன. தமிழ் மக்கள் மாத்திரம் ஆராதனையில் ஈடுபட்டதால், மிகவும் எளிமையான வழிபாடுகளாகவே அவை அமைந்திருந்தன.

அந்தக் கால கட்டத்தில் தோட்டங்களில் முகாமையாளர்களாக இருந்த ஐரோப்பிய துரைமார்கள் இந்த புதிய ஆலயத்தின்பால் மிகுந்த அக்கறைக் கொண்டிருந்ததுடன், ஆலய பாராமரிப்புக்காகவும் ஆலயத்துக்குச் செல்லும் வழியைத் துப்புரவு செய்தல் போன்ற வேலைகளுக்காகவும் அவ்வப்போது தோட்ட வேலையாள்களை அனுப்பினர். அது மாத்திரமல்லாது, துரைமார்களின் மனைவிமார்கள் ஈஸ்டர் மற்றும் நத்தார் ஆராதனை போன்ற நிகழ்வுகளின் போது அந்த பிரதேசங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட உயர்ந்த வகையான பூக்களைக் கொண்டு ஆலயத்தை அலங்கரிக்கும் பணிகளையும் முன்னெடுத்தனர்.

கடந்த ஆண்டுகளில் துரைமார்களதும் கிறிஸ்தவ பணியாளர்களதும் தொகை எண்ணிக்கையளவில் தோட்டங்களில் குறைந்துள்ள போதிலும், அண்மைக் காலத்தில் அதிகமான வேலைகள் ஆலயங்களில் முன்னெடுக்கப்பட்டன. அப்போதையதலைமை அருட்பணியாளராக இருந்த கெனன் ஆப்ரஹாம் மோசஸ் தனராஜின் தலைமைத்துவம் மற்றும் முயற்சியின் காரணமாகவும் அப்போதைய பிங்கராவை தோட்ட முகாமையாளர் ஆர். எல்.எஸ். ரனசிங்ஹவின் முயற்சியாலும் ஆலய நிரந்தர பணியாளருக்காக ஒரு குருமனை ஒன்று நிர்மாணிக்கப்பட்டது. அத்தோடு தற்போது சமூக நிலையமொன்றும் நிர்மாணிக்கப்படுகின்றது.

1999.01.24 முழுக்கு ஞானஸ்தானத் தொட்டி கட்டப்பட்டு, அப்போதைய குருமுதல்வர் டிலோராஜ் ரஞ்சித் கனகசபேவால் திருநிலைப்படுத்தப்பட்டது. அதேநாளில் புதிய குருமனைக்கான அடிக்கல்லும் நடப்பட்டது. 2002 ஆம் ஆண்டில் அப்போதைய அருட்பணியாளர் கெனன் ஆபிரஹாம் மோசஸ் தனராஜ் முயற்சியால் ஆலயத்துக்கு ஒரு முன்பள்ளி ஆரம்பிக்கப்பட்டது. அது தற்போதுவரை வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதோடு, சமூகத்தில் பெரும் வரவேற்பையும் பெற்றுள்ளது.

பல ஆண்டுகள் கல்லுள்ள பகுதியில் சபையாருக்கு பொருத்தமானதொரு வழிபாட்டு இடம் இல்லாமலிருந்ததன் காரணம் உணரப்பட்டு, அப்போதைய அருட்பணி அரசிளராஜாவின் முயற்சியால் புனித யோவான் ஆலயம் 2017 ஆம் ஆண்டு நிர்மாணிக்கப்பட்டது. அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் தடையின்றி தமது வழிபாட்டுத் தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய வாய்ப்பு கிடைத்துள்ளது. இந்தத் திருத்தலமானது அப்போதைய குருணாகலை மறை மாவட்ட பேராயர் அதி வணக்கத்துக்குஉரியகீர்த்திசிறிபெர்னன்டோவால் திறந்து வைக்கப்பட்டது. கொழும்பு மறை மாவட்ட பேராயராகவிருந்த அதிவணக்கத்துக்கு உரிய பேராயர் டிலோராஜ் ஆர். கனகசபேவால் திருநிலைப்படுத்தப்பட்டது.

தற்போது அனைத்து ஆலயங்களிலும் தந்தைமார் சங்கம், தாய்மார் சங்கம், வாலிபர் சங்கம், ஞாயிறு பாடசாலைகள் மற்றும் பாடகர்க் குழு என்பன முறையாக ஒருங்கமைக்கப்பட்டு அவை குருவானவர் அருட்பணி பிலிப்பையா தயாளனின் வழிநடத்தலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

பசறை புனித பர்னபா ஆலயத்தில் சிறு பிராயத்திலிருந்து பங்காளர்களாகவிருந்து இறை பணியில் தங்களை அர்ப்பணித்துக் கொண்டுள்ள அருட்பணியாளர்களாகிய அருட்பணி சுரேஸ்குமார் டேவிட் மற்றும் அருட்பணி ஜோன்சன் ஜோசப் ஆகியோரை நினைவு கூருவது சிறப்பாகும்.



# பயணிக்க முடியாத அவல நிலையில் தலவாக்கலை - டயகம பிரதான வீதி!

## பஸ் சாரதிகள், நடத்துனர்கள் இன்று ஆர்ப்பாட்டம்





**(தலவாக்கலை)**

தலவாக்கலை – டயகம பிரதான வீதி பாரியளவில் சேதமடைந்துள்ளது. இதனால் பஸ்கள் உள்ளிட்ட வாகனங்களை செலுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இந்த நிலையில் இந்த வீதியைத் திருத்துமாறு கோரி தலவாக்கலை – டயகம பிரதான வீதியில் சேவையில் ஈடுபட்டுவரும் அனைத்து தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துனர்கள் இன்று (18) நாகசேனை நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பணிப்பகிஷ்கரிப்புக்கு ஆதரவாக டயகம – தலவாக்கலை, தலவாக்கலை – எல்ஜின் மற்றும் தலவாக்கலை – இராணிவத்தை ஆகிய இடங்களுக்கு இந்த வீதி வழியாகப் பயணிக்கும் தனியார் பஸ்களின் உரிமையாளர்களும் சாரதிகளும் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லிந்துலை நகரில் இருந்து டயகம வரையிலான 21 கிலோ மீற்றர் தூரம் மிகவும் சேதமடைந்துள்ளது. மக்கள் நடந்து கூட செல்ல முடியாத நிலையில் இந்த வீதி காணப்படுகிறது என்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பஸ் சாரதிகள் தெரிவித்தனர்.

2014 ஆம் ஆண்டு அப்போதைய அரசு இந்த வீதிக்குக் காரப்பெட் இட்டு புனரமைப்பு செய்வதாக கூறி வீதியின் இருபுறமும் பல கிலோ மீற்றர் தூரம் அகலப்படுத்தியதாக மக்கள் கூறுகின்றனர்.

டயகம, அக்கரபத்தனை, போபத்தலாவ, மெனிக்பாலம், மன்ராசி, ஹோல்புரூக், திஸ்பனை, மெரயா, எல்ஜின், இராணிவத்தை போன்ற பல தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் நாள்தோறும் தலவாக்கலை – டயகம வீதியை போக்குவரத்துக்காக பயன்படுத்தி வருகின்றனர்.

இந்த வீதி சேதமடைந்து காணப்படுவதனால் பாடசாலை மாணவர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள், ஏனைய பயணிகள் உள்ளிட்டோர் கடும் சிரமத்துக்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே இந்த வீதியை உடனடியாகப் புனரமைக்கச் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சாரதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# காட்டுப் பாதையைத் திறப்பதில் தீர்க்கமான தீர்வு தரவேண்டும்!

## ஜனாதிபதி, ஆளுநரிடம் கிழக்கிலுள்ள இந்து அமைப்புகள் கூட்டாக கோரிக்கை!

( வி.ரி. சகாதேவராஜா)

கதிர்காமத்திற்கான காட்டுப் பாதை திறப்பதில் தீர்க்கமான தீர்வு தரவேண்டும் என்று ஜனாதிபதி மற்றும் கிழக்கு ஆளுநரிடம் கிழக்கிலுள்ள இந்து அமைப்புகள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட இந்து அமைப்புகள், சமூக அமைப்புகள் இந்த வேண்டுகோளை விடுத்துள்ளன.

அத்தோடு நாட்குறைப்பு தொடர்பில் தமது கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன.

சந்நிதி கதிர்காமம் பாதயாத்திரை குழுவினரும் காட்டுப் பாதை திறப்பதில் பாரபட்சம் பாகுபாடு இல்லாமல் பத்து நாள்களுக்கு முன்னரே திறக்க வேண்டும் என்று கோரியுள்ளனர்.

கதிர்காமம் ஆலயத்தின் ஆடிவேல் உற்சவம் எதிர்வரும் ஜுலை மாதம் நடைபெறவுள்ள நிலையில், ஆலயம் நோக்கிய பாத யாத்திரையை மக்கள் தற்போது ஆரம்பித்துள்ளனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதி லாகுகல பிரதேச செயலாளர் பகுதியில் அமைந்துள்ள உகந்தை காட்டுப்பாதை பக்தர்களுக்காக திறக்கப்பட்டு, ஜுலை 11ஆம் திகதி மூடப்படுவதாக அம்பாறை மாவட்ட அரச அதிபர் தலைமையில் உகந்தை முருகன் ஆலயத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

அதனை தொடர்ந்து, கதிர்காமத்தில் கடந்த 12 ஆம் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் உகந்தை காட்டுப்பாதை திறக்கும் திகதி பிற்போடப்பட்டு, எதிர்வரும் ஜுலை மாதம் 02 ஆம் திகதி காட்டுப்பாதை திறக்கப்பட்டு, 14ஆம் திகதி மூடப்படவுள்ளதாக மொனராகலை மாவட்ட அரச அதிபர் ரத்னாயக்க அறிவித்திருக்கிறார்.

முன்னர் அறிவிக்கப்பட்டபடி, 30ஆம் திகதியை கருத்தில் கொண்டு பக்தர்கள் பாதயாத்திரை செல்வதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்ட நிலையில், இந்த திகதி மாற்றமானது மக்கள் மத்தியில் பெரும் குழப்பத்தை ஏற்படுத்தியுள்ளது என்று சமூக அமைப்புக்கள் தெரிவித்துள்ளன.

காட்டு வழியாகப் பாதயாத்திரை மேற்கொள்ள தற்போது அறிவிக்கப்பட்டுள்ள புதிய கால எல்லை போதாமல் உள்ளதாகவும் பல சமூக அமைப்புகள் தங்கள் நிலைப்பாட்டை தெரிவித்து வருகின்றன.

# இந்திய அரசின் உலர் உணவுப் பொருள்கள் ஹஜ் பொருநாளை முன்னிட்டு வழங்கிவைப்பு




(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கை – இந்திய நல்லுறவை மேம்படுத்தும் வகையில் ஹஜ் பொருநாளை முன்னிட்டு மன்னார் மற்றும் முசலி பிரதேச செயலர் பிரிவை சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு நேற்று (17)உலர் உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மன்னார் அல்-அஸ்ஹர் தேசிய பாடசாலையில் வைத்து 78 குடும்பங்களுக்கும், முசலி தேசிய பாடசாலையில் வைத்து 80 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் இலங்கைக்கான இந்திய துணை தூதுவர் சாய்முரளி தலைமையில் உலர் உணவு பொருள்கள் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இந்திய தூதரக அதிகாரிகள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பலர் கலந்து கொன்டிருந்தனர்.

இதன் போது தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்குத் தலா பத்தாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# கல்முனை கோட்ட மெய்வல்லுனர் கார்மேல் பற்றிமா கல்லூரி சாதனை

(எம்.எம்.ஜெஸ்மின்)

கல்முனை கோட்ட மட்ட மெய்வல்லுனர் போட்டிகளில் கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரி சாதனை படைத்துள்ளது.

இந்தப் பாடசாலை 42 முதல் இடங்களையும், 27 இரண்டாம் இடங்களையும், 03 மூன்றாம் இடங்களையும் பெற்றுக் கல்முனை வலய மட்டப் போட்டிகளுக்குத் தெளிவாகியுள்ளது.

கல்முனை வலய மட்டத்தில் இடம் பெற்ற குழு விளையாட்டுக்களில் வலைப்பந்தாட்டப் போட்டியில் 16 வயதுக்கு உட்பட்ட மற்றும் 18 வயதுக்கு உட்பட்ட பெண்கள் அணியினர் முதல் இடங்களையும் பெண்களுக்கான காற்பந்தாட்டப் போட்டியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கிழக்கு மாகாண மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளனர்.





# யோகா விழிப்பூட்டல் செயலமர்வு

சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு யாழ். நீரிழிவுக் கழகமும், யாழ். பல்கலைக்கழக விளையாட்டுத் துறையினரும் இணைந்து இன்று (18) யாழ். திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் யோகா விழிப்பூட்டல் செயலமர்வை நடத்தினர்.

இதன்போது யோகா பயிற்சிகளும் மாணவர்களுக்குச் செய்து காண்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# நோர்வூட் நியூவெளி தோட்ட மக்களுடைய காணியை அபகரிக்க முயன்ற அரச அதிகாரி

## உடன் நடவடிக்கை எடுத்தார் அமைச்சர் ஜீவன் தொண்டமான்

(ஆ.ரமேஸ்)

நோர்வூட் நியூவெளி தோட்ட மக்களுக்கு வீடுகட்ட ஒதுக்கிய நிலத்தை முறைகேடாகக் கைப்பற்ற முயன்ற அரச அதிகாரிக்கு எதிராக அமைச்சர் ஜீவன் தொண்டமான் நடவடிக்கை எடுத்துள்ளார்.

நோர்வூட் நியூவெளி தோட்ட தொழிற்சாலை பிரிவுக்கு இன்று (18) காலை திடீர் விஜயத்தை மேற்கொண்ட அமைச்சர் இந்த நடவடிக்கையை எடுத்துள்ளார்.



இது தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

நோர்வூட் நியூவெளித் தோட்ட தொழிற்சாலைப் பிரிவில் கடந்த 2020 ஆம் ஆண்டு காலப் பகுதியில் ஏற்பட்ட தீ விபத்தால் பத்து குடும்பங்கள் தங்களது வீடுகளை இழந்து தற்காலிக இடத்தில் வசித்து வந்தன.

இவ்வாறு வீடுகளை இழந்த பத்து குடும்பங்களுக்கு இந்திய அரசின் நிதியினை கொண்டு புதிய வீடுகளை அமைத்துக் கொடுக்க அண்மையில் அடிக்கல் நடப்பட்டது.

இந்த நிலையில் இந்த வீடுகளை அமைத்துக் கொடுக்க ஒதுக்கப்பட்ட காணியை இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த அரச அதிகாரி ஒருவர் முறைகேடாக ஆக்கிரமித்துள்ளார் என்று அமைச்சர் ஜீவன் தொண்டமானின் கவனத்துக்குத் தோட்ட மக்கள் கொண்டு வந்திருந்தனர்.

இது தொடர்பாக கவனம் செலுத்திய அமைச்சருக்கு, தோட்ட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட இடத்தை தான் பணி புரியும் ஸ்தாபனத்தின் பெயரை பயன்படுத்தி, வீட்டு திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ள மக்களை மிரட்டி இடத்தை அபகரிக்கும் செயற்பாட்டில் அந்த அரச அதிகாரி ஈடுபட்டுள்ளார் என்ற விடயம் தெரிய வந்துள்ளது.

அத்துடன் பிரதேச பொது மக்கள் வழங்கிய புகாரை ஏற்று நேரில் சென்று நிலைமையை பார்வையிட்ட அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்தக் காணியானது காணி சீர்திருத்த ஆணைக்குழுவுக்குச் சொந்தமான காணி என்பதை உறுதி செய்தார்.

அத்துடன் இந்தக் காணியைத் தோட்ட நிர்வாகம் முறையாக பெற்றுக் கொண்டுள்ளது என்பதையும் உறுதி செய்து வீடுகளை நிர்மாணிக்கும் பணியை உடன் ஆரம்பிக்கவும் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

இந்த விஜயத்தில் அமைச்சருடன் நோர்வூட் பிரதேச சபையின் முன்னாள் தலைவர் ரவி குழந்தைவேல், இ.தொ.கா. தேசிய அமைப்பாளர் சக்திவேல், காணி சீர்திருத்த ஆணைக்குழு உத்தியோகத்தர்கள் மற்றும் அமைச்சரின் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

# கசிப்பு உற்பத்தி உபகரணங்களுடன் சாமிமலையில் ஒருவர் கைதானார்

(மஸ்கெலியா)

கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களுடன் ஒருவர் சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட பிரிவில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள ஸ்ரஸ்பி தோட்ட எனண்டல் பிரிவில் தொடர்ச்சியாகக் கசிப்பு உற்பத்தி செய்யும் தொழிலை மேற்கொண்டு வருவதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமாரவுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த இரகசியத் தகவல்களைத் தொடர்ந்து நேற்று இரவு அந்தப் பகுதியில் சுற்றி வளைப்பை மேற்கொண்ட பொலிஸார், நீண்ட நாட்களாக கசிப்பு உற்பத்தி செய்யும் உபகரணங்களுடன் ஒருவரைக் கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டவரிடம் பல கோணங்களில் விசாரணை நடத்தி வருகின்றனர். ஹட்டன் நீதிமன்றத்தில் அவரை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இந்திய நாடாளுமன்றில் முதல் முறையாக சபாநாயகரைத் தெரிவு செய்யத் தேர்தல்?

**புதுடெல்லி, ஜூன் 18**

நாடு விடுதலை அடைந்தது முதல் தற்போது வரை மக்களவை சபாநாயகர் போட்டியின்றியே தேர்வு செய்யப்பட்டு வருகிறார். அது இந்த முறையும் தொடருமா என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டு உள்ளது. சில சமயங்களில் சுதந்திர இந்தியாவில் முதல் தடவையாக சபாநாயகரைத் தேர்ந்தெடுக்க நாடாளுமன்றத்தில் தேர்தல் நடக்கக் கூடிய சூழல் உருவாகி வருகின்றது.

சமீபத்தில் இந்தியாவில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் எந்தக் கட்சியும் பெரும்பான்மை பெறவில்லை. தொடர்ந்து 2 முறை தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி செய்த பா.ஜனதா அதிகபட்சமாக 240 இடங்களை பெற்றது. எனவே தங்கள் கூட்டணி கட்சிகளுடன் இணைந்து மத்தியில் மீண்டும் ஆட்சியமைத்து இருக்கிறது. இதன் மூலம் மோடி தொடர்ந்து 3ஆவது முறையாக பிரதமராக பதவியேற்று உள்ளார். அவருடன் புதிய மந்திரி சபையும் பதவியேற்று உள்ளது.

இதைத்தொடர்ந்து நாடாளுமன்றத்தின் முதல் கூட்டத்தொடர் வருகிற 24 ஆம் திகதி தொடங்குகிறது. இதில் முதல் 2 நாகள் புதிய எம்.பி.க்கள் பதவியேற்பதுடன், 26 ஆம் திகதி நடப்பு 18 ஆவது மக்களவைக்கான சபாநாயகர் தேர்தலும் நடக்கிறது.

ஆளும் தேசிய ஜனநாயக கூட்டணி அரசில் பா.ஜனதாவுக்கு அடுத்தபடியாக தெலுங்குதேசம், ஐக்கிய ஜனதாதளம் கட்சிகள் உள்ளன. இதில் மந்திரி சபையை பொறுத்தவரை நிதி, இராணுவம், வெளியுறவு உள்ளிட்ட முக்கிய துறைகளை பா.ஜனதாவே தக்க வைத்துக்கொண்டது. தெலுங்குதேசம், ஐக்கிய ஜனதாதளம் கட்சிகளுக்கு தலா 2 மந்திரி பதவிகள் வழங்கப்பட்டன. இதைப்போல சபாநாயகர் பதவியையும் பா.ஜனதாவே தக்க வைத்துக்கொள்ளும் என எதிர்பார்க்கப்படுகிறது. பா.ஜனதா வேட்பாளருக்கு ஆதரவு அளிப்போம் என ஐக்கிய ஜனதாதளம் அறிவித்து இருக்கிறது. அதேநேரம் தெலுங்கு தேசம் கட்சியின் நிலைப்பாடு இதுவரை தெரியவில்லை. அந்த கட்சியும் சபாநாயகர் பதவியை கேட்பதாகக் கூறப்படுகிறது.

புதிய அரசில் சபாநாயகர் பதவியைக் கேட்டுப்பெறுமாறு தெலுங்கு தேசத்தை எதிர்க்கட்சிகளும் அறிவுறுத்தி வருகின்றன. அந்தப் பதவி இருந்தால் மட்டுமே தனது கட்சியைப் பாதுகாக்க முடியும் என்றும், பா.ஜனதாவுக்கு ஆதரவு அளிக்கும் கட்சிகளுக்கு அந்தக் கட்சி செய்யும் துரோகத்தை பல கூட்டணி கட்சிகள் அனுபவித்து இருக்கின்றன எனவும் சிவசேனா (உத்தவ்) மூத்த தலைவர் சஞ்சய் ராவத் தெலுங்கு தேசம் தலைவர் சந்திரபாபு நாயுடுவுக்கு எச்சரிக்கை விடுத்து உள்ளார்.

சபாநாயகர் விவகாரத்தில் பா.ஜனதா மற்றும் கூட்டணி கட்சிகளின் நிலை இவ்வாறு இருக்க, எதிர்க்கட்சிகளும் சபாநாயகர் நியமனத்தை அவ்வளவு எளிதாக விட்டுக்கொடுக்கப்போவது இல்லை என தெரிகிறது.18ஆவது மக்களவையில் 233 இடங்கள் எதிர்க்கட்சிகளின் இண்டியா கூட்டணிக்கு உள்ளது. இவ்வாறு வலுவான நிலையில் எதிர்க்கட்சிகள் உள்ளன.

மக்களவைத் துணை சபாநாயகர் பதவி தங்களுக்கு வேண்டும் என்பதில் எதிர்க்கட்சிகள் உறுதியாக உள்ளன. இந்தப் பதவி பெரும்பாலும் எதிர்க்கட்சிகளுக்கே வழங்கப்பட்டு வருகின்றன. அவ்வாறு எதிர்க்கட்சிகளுக்கு துணை சபாநாயகர் பதவி வழங்கவில்லை என்றால் சபாநாயகர் பதவிக்கு தேர்தல் நடத்தும் நிலையை உருவாக்குவோம் என மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர் தெரிவித்தார். அந்தவகையில் துணை சபாநாயகர் பதவி கிடைக்கவில்லை என்றால் சபாநாயகர் பதவிக்குத் தங்கள் தரப்பில் இருந்தும் வேட்பாளரை நிறுத்துவது என எதிர்க்கட்சிகள் திட்டமிட்டு உள்ளன.

இந்தியா விடுதலை அடைவதற்கு முன்பு 1925 ஆம் ஆண்டு முதல் 1946 வரை மத்திய சபையின் சபாநாயகர் பதவிக்கு 6 முறை தேர்தல் நடத்தப்பட்டு உள்ளது. ஆனால் சுதந்திர இந்தியாவில் இதுவரை மக்களவை சபாநாயகர்கள் அனைத்துக்கட்சிகளின் ஒருமித்த கருத்தின் அடிப்படையிலேயே நியமிக்கப்பட்டு வருகின்றனர். இதுவரை அதற்கு தேர்தல் நடத்தப்பட்டது இல்லை. எனவே இந்த முறையும் அந்த மரபை தொடர மத்திய அரசு விரும்புகிறது. ஆனால் துணை சபாநாயகர் பதவியை எதிர்க் கட்சிகளுக்கு ஆளும் தரப்பு விட்டுக்கொடுக்குமா என்ற கேள்வியும் எழுந்திருக்கிறது.

ஏனெனில் கடந்த 17 ஆவது மக்களவை துணை சபாநாயகர் இன்றியே 5 ஆண்டுகளும் நடந்திருக்கிறது. எனவே 18 ஆவது மக்களவையின் சபாநாயகர் ஒருமனதாக தேர்வு செய்யப்படுவாரா? இதில் கட்சிகளுக்கு இடையே ஒருமித்த கருத்து எட்டப்படுமா? என்ற எதிர்பார்ப்பு நாடு முழுவதும் நிலவி வருகிறது.



# புர்கினா பாசோவில் கிளர்ச்சிக் குழுவினரின் தாக்குதலில் நூறுக்கும் மேற்பட்டோர் சாவு!

வாகடுகு, ஜுன் 18

நைகர் நாட்டின் எல்லையருகே அமைந்துள்ள மன்சிலா பகுதியில் நடந்த தாக்குதலில், ஏராளமான வீடுகள், இராணுவ முகாம்கள் அடித்து நொறுக்கப்பட்டன.

ஆப்பிரிக்க நாடான புர்கினா பாசோவில் இராணுவ ஆட்சி நடைபெற்று வருகிறது. இதனை எதிர்த்து அங்கு பல்வேறு கிளர்ச்சிக் குழுக்கள் செயல்படுகின்றன. மேலும் அவர்கள் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்துதல், பொதுச்சொத்துகளை சேதப்படுத்துதல் என அரசாங்கத்துக்கு பெரும் அச்சுறுத்தலாக உள்ளனர். எனவே கிளர்ச்சியாளர்களை கட்டுப்படுத்த அரசாங்கம் போராடி வருகிறது. அதன் ஒருபகுதியாக இராணுவத்தினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபடுகின்றனர்.

இந்தநிலையில் நைகர் நாட்டின் எல்லையருகே அமைந்துள்ள மன்சிலா பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மர்ம நபர்கள் தாக்குதல் நடத்தினர். அப்போது ஏராளமான வீடுகள், இராணுவ முகாம்கள் அடித்து நொறுக்கப்பட்டன. பின்னர் இராணுவ வீரர்கள் மீது சரமாரியாகத் தாக்குதல் நடத்தினர். இதில் நூறுக்கும் மேற்பட்டோர் பலியாகினர். இந்த தாக்குதலுக்கு அல்-கொய்தா அமைப்புடன் தொடர்புடைய ஜமாஸ் நுஸ்ரத் உல்-இஸ்லாம் வா அல்-முஸ்லிமின் என்ற கிளர்ச்சிக் குழு பொறுப்பேற்று உள்ளது.

தாக்குதல் தொடர்பாக அரசு தரப்பில் இதுவரை அறிக்கை வெளியிடப்படவில்லை. எனினும், கிளர்ச்சிக் குழுவிற்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிகிறது. இதன் காரணமாக அங்கு பெரும் பதற்றம் நிலவுகிறது.

# 7,000 கெண்டெயினர்களில் ஆயுதங்கள் ரஷ்யாவுக்கு வழங்கியதாம் வட கொரியா

ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் இரண்டு நாள் பயணமாக வட கொரியாவுக்குப் பயணம் மேற்கொள்கிறார். இதனிடையே உக்ரைன் மீதான ரஷ்யப் போருக்கு ஆதரவு அளிக்கும் வட கொரியாவுக்கு அதிபர் புடின் பாராட்டுத் தெரிவித்துள்ளார்.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையிலான போர் 844 நாள்களைக் கடந்துள்ள நிலையில், "உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டுள்ள சிறப்பிராணுவ நடவடிக்கைக்கு வட கொரியா ஆதரவாக இருப்பதை நாங்கள் பாராட்டுகிறோம். ரஷ்யா மற்றும் வட கொரியா இடையிலான உறவை மேம்படுத்தி வருகிறோம்" என்று ரஷிய அதிபர் புடின் தெரிவித்துள்ளார்.




அதிபர் புடினின் வட கொரிய பயணத்தின் போது, இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பான உயர்மட்டப் பேச்சு நடைபெற இருக்கிறது. இரண்டாம் உலக போரை தொடர்ந்து வட கொரியா உருவானதில் இருந்தே ரஷ்யா மற்றும் வட கொரியா இடையே நட்புறவு இருந்து வருகிறது.

எனினும், கடந்த 2022 ஆம் ஆண்டு ரஷ்யா - உக்ரைன் போர் தொடங்கியதில் இருந்து ரஷ்யா மற்றும் வடகொரியா இடையிலான உறவு இதுவரை இல்லாத அளவுக்கு மேம்பட்டு இருக்கிறது. இதனிடையே உக்ரைன் மீதான போருக்கு உதவும் வகையில், வட கொரியா சார்பில் 7000 கெண்டெயினர்களில் ஆயுதங்கள் அனுப்பப்பட்டன.

இதில் வெடி குண்டுகள், அதிநவீன துப்பாக்கிகள் மற்றும் ஏவுகணைகள் இடம்பெற்று இருந்தன எனக் கூறப்படுகிறது. உக்ரைன் உடனான போர் தீவிரம் அடைந்ததில் இருந்து, புடின் தனிமைப்படுத்தப்பட்டு இருப்பதால் அவர் நண்பர்களைத் தேடி வருகிறார் என்றும் கூறப்படுகிறது.

பக்கங்கள் 05

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 18/06/2024

## கனடாவில் வீடு விற்பனை கணிசமாகக் குறைந்தது!

ஒன்ராரியோ, ஜூன் 18
கடந்த ஆண்டை விட இந்த ஆண்டின் மே மாதத்தில் வீடு விற்பனை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.
கனடிய வீடு விற்பனை C2




# டொரன்டோவில் துப்பாக்கிச் சூடு

# பெண் உட்பட மூன்று பேர் மரணம்

**ஒன்ராரியோ, ஜூன் 18**
**டொரன்டோவில் பாடசாலை மற்றும் குழந்தை பராமரிப்பு இல்லம் ஆகியவற்றுக்கு அருகில் இருக்கும்**
**அலுவலகம் ஒன்றில் நிகழ்ந்த துப்பாக்கிச் சூட்டில் ஒரு பெண் உட்பட மூவர் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**
**டொன் மில்ஸ் வீதியில் யோர்க் மில்ஸ் வீதிக்கும் லோரன்ஸ் வீதிக்கும் இடையில் உள்ள மல்லார்னட் வீதியில் அமைந்துள்ள அலுவலகம் ஒன்றில் நேற்று மாலை 3:30 மணியளவில் இந்தச் சம்பவம் நிகழ்ந் ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

ஆண்கள் கத்தோலிக்க பாடசாலையான நோர்த்மவுன்ட் பாடசாலை இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் காரணமாக தற்காலிகமாக பூட்டப்பட்டது.

அதேவேளை சென் ஜோர்ஜ் குழந்தை பராமரிப்பு இல்லமும் பாதுகாப்புக் காரணங்களுக்காக தற்காலிகமாக பூட்டப்பட்டுள்ளது

துப்பாக்கி சூடு நிகழ்ந்த நேரம் 104 குழந்தைகள் பராமரிப்பு இல்லத்தில் இருந்தனர் எனத் தெரியவருகிறது.

சுட்டுச் சம்பவத்தின் சூத்திரதாரியும் உயிரிழந்தவர்களில் அடக்கம் என்று கூறப்படுகின்றது. எனினும் இந்தச் சம்பவம் குறித்த விசாரணைகள் தொடரும் நிலையில் சந்தேக நபர்கள் குறித்து பொலிஸார் எந்தத் தகவலையும் வெளியிடவில்லை.

# வெளிநாட்டுத் தலையீட்டு விவகாரத்தில் எம்.பிக்கள் இழைத்தது துரோகம் அல்ல

## *முட்டாள்தனமான முடிவுகள்தான் என பசுமைக் கட்சித் தலைவர் விமரிசனம்*



ஒன்ராரியோ, ஜூன் 18
வெளிநாட்டுத் தலையீடு குறித்த இரகசிய அறிக்கையில் அடையாளம் காணப்பட்ட தற்போதைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் வெளியாள்கள் தம்மை அணுகும்போது கூடுதல் கேள்விகளைக் கேட்டிருக்க வேண்டும் என்று பசுமைக் கட்சித் தலைவர் எலிசபெத் மே தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அவர்களின் முடிவுகள் முட்டாள்தனமானவை எனவும், துரோகம் அல்ல எனவும் அவர் கூறியுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தேசிய பாதுகாப்பு மற்றும் புலனாய்வுக் குழுவின் அறிக்கையைப் படித்த பின்னர் நடத்திய இரண்டாவது நீண்ட செய்தியாளர் சந்திப்பின் போது மே இந்தக் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

2019 மற்றும் 2021 நாடாளுமன்றத் தேர்தல்களின் முடிவுகளில் தாக்கத்தை ஏற்படுத்த முயற்சிக்கும் சீன அரசாங்கத்தைப் பற்றிய பல மாத ஊடகத் தலைப்புச் செய்திகளைத் தொடர்ந்து, பிரதம மந்திரி ஜஸ்டின் ட்ரூடோவின் வேண்டுகோளின் பேரில் மார்ச் 2023இல் விசேட குழுவொன்று இந்த விசாரணையை ஆரம்பித்திருந்தது.

ரஷ்யா மற்றும் ஈரானுடன் கனடாவில் வெளிநாட்டு தலையீட்டில் இந்தியாவும் முக்கிய குற்றவாளியாக இந்த அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ளது.




# தென்மேற்கு ஒன்றாரியோ பகுதியில் கடும் வெப்பநிலை என எச்சரிக்கை!

ஒன்ராரியோ,ஜூன் 18

ஒன்ராரியோ, கியூபெக், நியு பிரன்ஸ்விக் மாகாணங்களில் கடுமையான வெப்ப எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாகாணங்களில் சில பகுதிகளில் இந்த வாரம் வெப்பநிலை 45 பாகை செல்சியல் வரை உணரப்படலாம் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

இன்றைய தினம் முதல் இந்த ஆபத்தான வெப்பநிலை நிலவும் என கனடிய தேசிய வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

ஒன்ராரியோ முழுவதும், வெப்பநிலை 35 பாகை செல்சியஸ் வரை உணரப்படும் என கணிக்கப்பட்டுள்ளது.

ஈரப்பதத்துடன், டொரன்டோ போன்ற பகுதிகளில் வெப்பநிலை 45 பாகை செல்சியஸ் வரை உணரப்படுகிறது.

இலண்டன் முதல் ஒட்டாவா வரையிலான பகுதியில் ஜூன் 17ஆம் திகதி திங்கட்கிழமை முதல் சுற்றுச்சூழல் கனடா வெப்ப எச்சரிக்கைகளை வெளியிட்டது.

லண்டன், ரொறன்ரோ, நயகரா, ஓவன் சவுன்ட் மற்றும் கிங்ஸ்டன் ஆகிய பகுதிகளில் இவ்வாறு கடுமையான வெப்பநிலை நிலவும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த எச்சரிக்கை சோல்ட் சென் மேரி முதல் வடக்கே ஃபோர்ட் அல்பானி வரை நீள்கிறது.

கடுமையான வெப்பநிலை வாரத்தின் பிற்பகுதியில் கிழக்கு நோக்கி நகரும் என சுற்றுச்சூழல் கனடா குறிப்பிட்டுள்ளது.

## வெளிநாட்டுத் தலையீட்டை எதிர்த்துப் போராடுவதற்காக

# உளவு நிறுவனத்திடமிருந்து தகவல்கள் பரிமாற கோருகின்றார் பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர்

பிரிட்டிஷ் கொலம்பியா,ஜூன் 18

நாடு கடந்த ஒழுங்கமைக்கப்பட்ட குற்றம், இணையப் பாதுகாப்பு மற்றும் கொலை சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுகளை மேற்கோள் காட்டி, மாகாண மட்டத்தில் வெளிநாட்டு தலையீட்டை எதிர்த்துப் போராடுவதற்கு கனடாவின் உளவு நிறுவனத்திடமிருந்து தகவல்களை பெறுவதற்கு அவசரமாக உதவும்படி பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் டேவிட் எபி வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்குத் தாம் கடிதம் ஒன்றை அனுப்பினார் என பிரிட்டிஷ் கொலம்பியா முதல்வர் டேவிட் எபி கூறியுள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் நிகழக்கூடிய வெளிநாட்டு தலையீட்டை இடைமறித்து நிவர்த்தி செய்வதற்குத் தேவையான தகவல்கள் இல்லை எனவும் அவர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

'இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நாங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என நேற்றைய தினம் வான்கூவரில் வீடுகள் தொடர்பான ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் கருத்து தெரிவித்தார்..



பிரிட்டிஷ் கொலம்பியா சர்ரே பகுதியில் கடந்த வருடம் ஜூன் மாதம் சுட்டுக் கொல்லப்பட்ட சீக்கியத் தலைவர் ஹர்தீப் சிங் நிஜ்ஜார் விவகாரம் உட்பட வெளிநாட்டு தொடர்புகள் இருப்பதாகக் கூறப்படும் தொடர்ச்சியான சூழ்நிலைகளை அவர் இதன் போது விவரித்தார்.

## கனடாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கம் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளது.

இதே காலப்பகுதியில் சராசரி வீட்டின் விலையும் குறைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஆண்டு மே மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த ஆண்டு விற்பனை செய்யப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை 5.9 சதவீதம் குறைவடைந்துள்ளதாக கனடிய வீடு விற்பனைச் சங்கம் தெரிவிக்கின்றது.

அதேவேளை மே மாதத்திற்கான தேசிய சராசரி விற்பனை விலை முந்தைய ஆண்டை விட நான்கு சதவீதம் குறைந்துள்ளது.

2024இல் மே மாதத்திற்கான தேசிய சராசரி விற்பனை விலை 699,117 டொலர்கள் ஆகும்.

மே மாதத்தில் வான்கூவர் பெரும் பகுதியில் வீடு விற்பனை ஒரு வருடத்திற்கு முன்னர் இருந்ததை விட 19.8 சதவீதம் குறைந்துள்ளது.

டொரன்டோ பெரும்பாகத்தில் இதே காலப்பகுதியில் வீடு விற்பனை 22.2 சதவீதம் குறைந்துள்ளது.

ஆனாலும் எட்மன்டன் நகரில் வீடு விற்பனை 19.7 அதிகரித்துள்ளது.




# மெக்கில் பல்கலைக்கழகப் போராட்டக்காரர்களின் முகாமில் கோடை காலப் பாடசாலை விரிவுரைகள்!

கியூபெக், ஜூன் 18

ஏப்ரலில் இருந்து மெக்கில் பல்கலைக்கழகத்தின் நகர வளாகத்தில் முகாமிட்டுள்ள பாலஸ்தீனிய சார்பு ஆர்வலர்கள் திட்டத்தை விளம்பரப் படுத்த பயன்படுத்தப்பட்ட ஆயுதம் ஏந்திய போராளிகளின் புகைப்படங்கள் தொடர்பான சர்ச்சைகள் இருந்தபோதிலும், நேற்றையை தினம் அவர்கள் தங்கள் கோடைகாலப் பாடசாலை என்று அழைக்கப்படுவதைத் தொடங்கினார்கள்.

முகாமில் இளைஞர் கோடைகால நிகழ்ச்சிகளாக 'புரட்சிகர பாடங்கள்' மற்றும் அடுத்த நான்கு வாரங்களில் அரசியல் விவாதங்கள், பாலஸ்தீனிய வரலாறு, எதிர்ப்பு இயக்கம் மற்றும் இஸ்ரேல் மீதான ஹமாஸ் தாக்குதலுக்குப் பிறகு ஒக்டோபர் 7இல் இருந்து ஊடகங்களின் பங்கு பற்றிய தொடர் விரிவுரைகள் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வாரம் கோடைகால நிகழ்ச்சிக்கான சுவரொட்டிகள் இணையத்தில் வெளியிடப்பட்ட பின்னர், பாலஸ்தீனிய எதிர்ப்புப் போராளிகள் கா..பியே அணிந்து துப்பாக்கிகளை வைத்திருக்கும் புகைப்படங்களை வெளியிட்ட பின்னர், மத்திய மற்றும் மாகாண அரசியல்வாதிகள் முகாம் அகற்றப்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்தனர்.

இந்த சுவரொட்டி 'ஆத்திரமூட்டலுக்கும், வன்முறையை வெளிப்படையான தூண்டுதலுக்கும், போதனைக்கும்' சமமானது என கியூபெக் உயர்கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

# 12 ஆம் வகுப்பு வரையில் கைபேசிகளுக்குத் தடை

## அல்பேர்ட்டா மாகாணம் தீர்மானம்

அல்பேர்ட்டா, ஜூன் 18

இலையுதிர்காலத்தில் தொடங்கி முன்பள்ளி முதல் 12 ஆம் வகுப்பு வகுப்பறைகளில் கைபேசிகளைத் தடை செய்வதற்கு அல்பேர்ட்டா மாகாணம் தீர்மானித்துள்ளது.

கைபேசிகள் கற்றலுக்கு உதவுகின்றன, ஆனால் கவனச்சிதறல் மற்றும் சைபர்புல்லிங்கிற்கு அவை வழிவகுக்கும் என்று அல்பேர்ட்டா கல்வி அமைச்சர் டெமெட்ரியோஸ் நிக்கோலெய்ட்ஸ் நேற்றைய தினம் தெரிவித்தார்.

இரத்த சர்க்கரை அளவைக் கண்காணிப்பது அல்லது சிறப்புக் கற்றல் போன்ற உடல்நலத் தேவைகளுக்காக தொலைபேசிகளைப் பயன்படுத்தும் மாணவர்களுக்கு விதிவிலக்குகள் இருக்கும் என்றார்.

இல்லையெனில், வகுப்பு நேரத்தில் தனிப்பட்ட சாதனங்கள் அணைக்கப்பட்டு, பார்வைக்கு வெளியே சேமிக்கப்பட வேண்டும்.

பாடசாலை இணைய நெட்வொர்க்குகளும் சமூக ஊடகங்களுக்கான அணுகலைக் கட்டுப்படுத்த வேண்டும்



என நிக்கோலெய்ட்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

சாதனங்கள் கற்றலுக்கு இடையூறு விளைவிப்பதாக ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் பெருகிவரும் கவலைகளுக்கு மத்தியில் கைபேசி பாவனைக்கான விதிகளை அமைப்பதற்கு அல்பேர்ட்டா பாடசாலை சபைகள் அனுமதி வழங்கியுள்ளன.

# ஹாலி:ஃபாக்ஸ் மேயராக வர ஆண்டி :ஃபில்மோர் முயற்சி!

## எம்.பி. பதவியை முடிவுறுத்துகின்றார்

ஹாலிபெக்ஸ், ஜூன் 18

லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர் ஆண்டி :ஃபில்மோர் இலையுதிர்காலத்தில் நாடாளுமன்றத்திற்கு திரும்பப் போவதில்லை எனத் தெரிவித்துள்ளார்.

பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை ஆட்சிக்குக் கொண்டுவந்த 2015 தேர்தலில் :ஃபில்மோர் முதன்முதலில் ஹாலி:ஃபாக்ஸின் நாடாளுமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இந்த அக்டோபரில் நடைபெறும் நகராட்சித் தேர்தலில் ஹாலி:ஃபாக்ஸ் மேயர் பதவிக்கு போட்டியிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்றத்தில் தனது இறுதி உரையில், :ஃபில்மோர் தனது பார்வைகள் எதிர்காலத்தில் அமைக்கப்பட்டிருப்பதாகவும் ஹாலி:ஃபாக்ஸுக்கு இன்னும் நிறைய வேலைகள் உள்ளன எனக் கூறியுள்ளார்.

நகரில் கனடா போஸ்ட் நிலங்களை வீடமைப்புக்காகத் திறந்துவிடுவது போன்ற விடயங்களில் தொடர்ந்து பணியாற்றப் போகிறார் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்றத்தில் இருந்த காலத்தில், :ஃபில்மோர் ஜனநாயக நிறுவனங்கள், கனேடிய பாரம்பரியம், உள்கட்டமைப்பு மற்றும் தொழில்துறை அமைச்சர்களின் நாடாளுமன்ற செயலாளராக இருந்தார்.





# ரஷ்ய முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரின் மனைவியார் இன்று பிரதமர் ட்ரூடோவுடன் ஒட்டாவாவில் சந்திப்பு!

ஒன்ராரியோ, ஜூன் 18

ரஷ்யாவின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் அலெக்ஸி நவல்னியின் மனைவி, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் வெளிவிவகார அமைச்சர் மெலனி ஜோலி ஆகியோரை இன்று ஒட்டாவாவில் சந்திப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

யூலியா நவல்னாயாவின் வருகை ரஷ்ய சிறையில் தனது கணவர் இறந்து நான்கு மாதங்களுக்குப் பிறகு அமைவது குறிப்பிடத்தக்கது.

நவல்னி ஜனாதிபதி விளாடிமிர் புட்டினின் மிகப் பெரிய எதிரியாகக் கருதப்பட்டார். அத்தோடு அரசாங்கத்தில் ஊழலுக்கு எதிராகப் போராடுபவராக அறியப்பட்டார்.

சிறையில் அடைக்கப்படுவதற்கு முன்பு அவர் பலமுறை துன்புறுத்தப்பட்டார், இரசாயனங்களால் தாக்கப்பட்டார் மற்றும் நரம்பு முகவர் மூலம் விஷம் கொடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

செவ்வாய்கிழமை பிற்பகல் ஒட்டாவாவில் நவல்னாயாவை அமைச்சர் ஜோலி சந்திப்பார், இருவரும் ரஷ்யாவில் மனித உரிமைகள் மற்றும் அரசியல் எதிர்ப்பாளர் கள் எதிர்கொள்ளும் அபாயங்கள் குறித்து விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# வீடு திருத்துதல் என்ற கணக்கில் கனடாவில் மோசடிச் சம்பவங்கள்



கனடாவில் வீடுகளைப் பழுது பார்ப்பதாகக் கூறி மேற்கொள்ளப்படும் மோசடிகள் குறித்து தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக வீடுகளின் ஜன்னல்கள், கதவுகள் பழுது பார்த்து தரப்படும் எனக் கூறி மக்களிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டு மோசடி செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.


கதவுகள் ஜன்னல்கள் திருத்தப்படும் எனவும் பழுது பார்க்கப்படும் எனவும் கூறி பல்வேறு நபர்களிடம் பணம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

எனினும் பல சந்தர்ப்பங்களில் இவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட பணத்தின் ஊடாக ஜன்னல் கதவுகள் பழுது பார்க்கப்படவில்லை. கனடாவின் நோவா ஸ்கோசியா பகுதியில் இவ்வாறான சம்பவங்கள் பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்ட சிலர் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள் ளனர்.

பிரட்டில் மட்டும் பிரான்சிஸ் என்ற ஓய்வு பெற்றுக்கொண்ட தம்பதியினர் ஜன்னல் கதவுகளை பழுது பார்ப்பதற்காக 5200 டிலர்களை வழங்கினர் எனவும் எனினும் பழுது பார்க்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

இவ்வாறு பலரிடம் பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



# ஆபத்தான பாக்டீரியா நோய்த் தொற்று மானிடோபா பகுதியில் பரவுகின்றதாம்

கனடாவின் மானிடோபா பகுதியின் ஆபத்தான பாக்டீரியா நோய் தொற்று பரவுகை தொடர்பில் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்த பாக்டீரியா தாக்கத்துக்கு உள்ளாகும் மக்கள் கடுமையாக நோய்வாய்ப்படுவதாகவும், இது உயிராபத்தை ஏற்படுத்தக்கூடியது எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மிகவும் அரிய வகையிலான பாக்டீரியா தாக்கம் பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. மானிட்டோபா சுகாதார அதிகாரி கள் இது தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஆபத்தான மூளையுறை அழற்சி நோய் ஏற்படுவதாகவும் இது மூளை மற்றும் முள்ளந்தண்டு பகுதியில் பாதிப்பை ஏற்படுத்தும் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனடிய பொது சுகாதார முகவர் நிறுவனம் ஒன்றாரியோ மற்றும் மானிட்டோபா பகுதிகளில் இந்த ஆண்டில் குறித்த பாக்டீரியா தொற்று பரவுகை குறித்து உறுதி செய்யப்பட்டுள்ளது.

மனிடோபாவில் ஆண்டொன்றுக்கு ஆறு நோயாளிகள் பதிவாகின்ற போதிலும் இந்த ஆண்டில் சுமார் 19 பேர் நோயினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.